மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

107—

சிற்பக் கூடம்

***1877 திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, நார்த்தாமலையில் சிற்பக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் கங்கை ஆறு, யமுனை ஆறு, பாலாறு என்று பல ஆறுகள் உண்டு. ஆனால், வற்றாத ஒரே ஆறு மாண்புமிகு அம்மா, உங்கள் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி விடை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, நார்த்த மலையில் சிற்பக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 24]

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவி, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசாமி கோயிலுக்கு கோட்டையிலே குறையில்லை; நாட்டிலே மக்களுக்கு வளமான வாழ்வு தந்த எங்கள் அம்மா, வானம் உள்ள வரை நீங்கள்தானே தமிழகத்தின் நிரந்தர முதல்வர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தங்கத் தாரகை அம்மா அவர்களின் ஆசியோடு என் கேள்வியை சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ்நாட்டின் மிக அழகிய 10 இடங்களில் முதலிடத்தை Google website க்கு கொடுத்திருப்பது புதுக்கோட்டை மாவட்டம். கந்தர்வகோட்டை தொகுதி, நார்த்தாமலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க விஜயாலய சோழீஸ்வரன் கோயில் அமைந்துள்ளது. இதை உள்ளடக்கி 9 மலைகள் சூழ்ந்த இடத்தின் நடுவே அமர்ந்து அருள்பாலிக்கும் நார்த்தாமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடைபெற்று 18 ஆண்டுகள் ஆகின்றன. மக்களின் குறைகளை அவர்கள் கூறும் முன்பே, அறிந்து நிறைவு செய்யும் வள்ளல் பாரியை மிஞ்சி, (மேசையைத் தட்டும் ஒலி) மாரி என வாரி வழங்கும் வள்ளல் தர்ம தேவதையின் ஆட்சியில், நார்த்தாமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்தப்பெறுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்துவது குறித்த கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின்

கவனத்திற்கு எடுத்துச் சென்று, மதிப்பீடு தயார் செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் பணிவோடு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) உள்நாட்டு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை மேம்படுத்துதல், மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், ஆற்று முகத்துவாரங்களில் தூர் வாருதல், சேத்துப்பட்டு, பசுமைப் பூங்காவில் முப்பரிமாண காணொளிக் காட்சி அமைத்தல், கடல் மீன் உணவகங்களை ஏற்படுத்துதல், மீனவ இளைஞர்களுக்கு உதவித் தொகையுடன் பயிற்சி வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைமையிலான அரசு, மீனவர் நலத் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகளை*